**கொலொன்னாவ நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 29 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்டம்பர் 15 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர கொலொன்னாவ பிரதேச சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன

(அ) கொம்பேஸ்ட் கட்டிடப் பிரிவு உடைந்து வீழ்ந்ததால் சபையின் பொருட்களுக்கு ஏற்பட்ட இழப்பு ரூபா. 266,239 ஆகும். இது கணக்கிடப்படவில்லை.

(ஆ) ஆண்டிற்கான தீர்வை வருவாயும் தீர்வை வரி நிறுவனக் கணக்கும் ரூபா 1,186,884 அதிகரித்து காட்டப்பட்டிருந்தன.

(இ) பட்டப்படிப்புப் படியாகிய ரூபா 76,354 முற்பணக் கணக்கில் முன் கொண்டு வரப்பட்டதால் திரண்ட நிதியமும் முற்பணக் கணக்கும் அதேயளவு தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) இறுதிக் கையிருப்பு ரூபா 136,732 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 6,900 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட் கையிருப்பு ரூபா 9,600 ஆகக் கணக்கிலிடப்பட்டமையால் கையிருப்புக் கணக்கு ரூபா 2,700 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டிலிருந்து முன் கொண்டுவரப்பட்டவாறிருக்கும் வைப்பு மீதி தவறாகக் குறித்து கொள்ளப்பட்டமையால் நடைமுறைச் சொத்தும் நடைமுறைப் பொறுப்பும் ரூபா 299,949 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(எ) முன்னைய ஆண்டுகளின் பொருட்டு வேலைகளுக்கென பெறப்பட்ட படிவத்தை விற்பனை செய்தமையால் பெற்ற ரூபா 232,875 வைப்புக் கணக்கில் குறித்துக்

கொள்ளப்பட்டமையால் திரண்ட நிதியமும் நடைமுறைப் பொறுப்பும் அதேயளவு தொகையால் முறையே குறைத்தும் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) கூடுதலாக அறவிடப்பட்ட ஊழியர் கடன் தவணைப் பணமான ரூபா 10,164 ஊழியர் கடனில் எதிரீடு செய்யப்பட்டமையால் ஊழியர் கடன் அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

கணக்குகளின் பிரகாரம் 04 கணக்கீட்டு விடயங்களது மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 66,422,333 ஆகும். அவற்றுடன் தொடர்புடைய உப பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 46,840,092 ஆகும்.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

**(அ) பதில் கிடைக்கப் பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2011 முதல் 2015 வரை தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட 03 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2017 யூன் மாதமளவிலும் பதில் வழங்கப்படாதிருந்தது.

**(ஆ) தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்பிக்காமை**

தேவையான தகவல்களைச் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 67,438,727 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**02. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா34,896,256 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 53,261,623 ஆகும்.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு மீதி ரூபா 666,509 ஆகுமெனினும், வங்கிக் கூற்றின் பிரகாரம் அம் மீதி ரூபா 88,436 ஆகும். 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அவ்வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் அநேக ஆண்டுகளாக முன்கொண்டுவரப்பட்டிருந்த தேறாத காசோலைகள், வங்கி வழுக்களும் பண மாற்றங்களும் ஆகிய ரூபா 787,099 கூட்டப்பட்டும் அம் மீதியில் ரூபா 323,195 கழித்துக் கொள்ளப்பட்டிருந்தபோதும், தொடர்புடைய சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.3 **வருவாய் நிர்வாகம்**

2.3.1 **மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன**

சபையால் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் பொருட்டுச் சமர்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| வருவாய்க்கான விடயம் | 2016 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | 2016 பட்டியல் தொகை | உள்ளவாறான அறவீடு | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | 2015 ஆண்டிற்கான பட்டியல் தொகை | உள்ளவாறான அறவீடு | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தீர்வையும் வரியும் | 43,857,302 | 61,888,299 | 70,424,501 | 35,321,100 | 35,370,301 | 67,718,253 | 59,231,282 | 43,857,302 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 42,200 | 396,750 | 395,500 | 43,450 | 3,350 | 355,600 | 316,750 | 42,200 |
| வர்த்தக மற்றும் வியாபார வரி | 756,741 | 861,900 | 864,900 | 753,741 | 771,691 | 872,600 | 887,550 | 756,741 |
| வாடகை வருவாய் | 3,351,767 | 7,645,458 | 7,118,317 | 3,878,907 | 2,029,634 | 4,163,532 | 2,841,399 | 3,351,767 |

2.3.2 **தீர்வையும் வரியும்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 50,000க்கு மேற்பட்ட நிலுவைகளைக் கொண்டிருந்த 42 அரச மற்றும் தனியார் துறை நிலுவைகளது மொத்தத் தொகை ரூபா 20,472,350 ஆகும். இந் நிலுவையானது மீளாய்வாண்டு இறுதித் தினத்தில் உள்ளவாறான மொத்தத் தீர்வை வரி நிலுவையின் 58 சதவீதமாகும்.

2.3.3 **குத்தகை வாடகை**

(அ) சபைக்குச் சொத்துக்களை ஒப்படைத்தமையால் 2016 ஆம் ஆண்டின்போது குத்தகை வாடகை எதுவுமே அறவிடப்படாதிருந்த இந்நிறுவனங்களிலிருந்து ரூபா44,850 பெறப்பட வேண்டியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது நகர சபையின் சிற்றுண்டிச் சாலை காலாண்டுக்கு ரூபா 13,740 எனும் விதப்படி கேள்வி கோரப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. செப்டெம்பர் 30 ஆந் திகதி குத்தகைக் காலம் முடிவடைந்ததால் சிற்றுண்டிச் சாலை மூடப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் முதலாம் காலாண்டிற்கு மாத்திரமே குத்தகைத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. நடப்பாண்டில் எஞ்சிய காலப்பகுதிக்கு உரிய நிலுவை ரூபா 27,480 ஆகும். இது 2017 மே 30 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 ஆம் ஆண்டின்போது 07 விற்பனை நிலையங்களிலிருந்து வாடகைத் தவணைப் பணமோ அல்லது நிலுவையாக இருந்த தவணைப் பணமோ அறவிடப்படாது 2016 டிசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 691,370 ஆகும். 12 மாதங்களுக்கு மேற்பட்ட நிலுவைகளையுடைய விற்பனை நிலையங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த மொத்த வாடகை நிலுவை ரூபா 860,826 ஆகும்.

**2.3.4 வர்த்தக வரியும் வியாபார வரியும்**

முன்னைய ஆண்டின் பொருட்டுச் சபை பெற வேண்டிய தொகை ரூபா 756,741 ஆகும். நடப்பாண்டில் அறவிடப்பட்ட தொகை ரூபா 3,000 அல்லது 0.4 சதவீதம் மாத்திரமே ஆகும். எஞ்சிய நிலுவையாகிய ரூபா 753,741 அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கான அங்கிகரிக்கப்பட்ட பதவியணி விபரத்தின் பிரகாரம், சபையின் செயலாளர் பதவி இலங்கை நிர்வாக சேவையின் 111/11 தொகுதி மற்றும் கணக்காளர் பதவி இலங்கை கணக்காளர் சேவையின் 111/11க்கு உரித்தாக வேண்டும். எனினும் செயலாளர் பதவிக்கு முகாமைத்துவ உதவி உயர்தர உத்தியோகத்தர் ஒருவரும் கணக்காளர் பதவிக்கு முகாமைத்துவ உதவியாளர் 01 ஆந்தரப் பெண் உத்தியோகத்தர் ஒருவரும் பதில் கடமையில் அமர்த்தப்பட்டிருந்தனர். மேலும், நிர்வாக உத்தியோகத்தர் பதவியும் வெற்றிடமாக இருந்தது.

(ஆ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 37,431,534 ஆகும். அதில் வேலை இடமாற்றத்திற்கு உள்ளாகிய மற்றும் ஓய்வு பெற்றவர்களது கடன் நிலுவை மீதி ரூபா 3,552,017 ஆகும். இது ஒட்டுமொத்தமாக அறவிடப்பட வேண்டியுள்ள ஊழியர் கடன் மீதிகளது 09 சதவீதமாகும்.

(இ) மீளாய்வாண்டினது களஞ்சியப் பொருட்கள் தொடர்பான மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பட்டோலைப் பொருட்களுக்கு பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களுக்கு உள்ளாகும்போது களஞ்சியத்தில் ஒப்படைத்தமை தொடர்பான அறிக்கைகள் சரிவரப் பேணப்படாமை, பொருட்களை வழங்கும் சந்தர்ப்பங்களில் வழங்கற் பத்திரத்தின் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை போன்ற காரணங்களால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 35,631,670 பெறுமதியான பொதுக் களஞ்சிய மீதியினது பிழையற்ற தன்மையை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

2014 ஆம் ஆண்டில் அமுலில் இருந்த பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு சபையின் நிர்வாகச் செலவினத்தை ஈடுசெய்வதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வழங்கிய ரூபா 100,000 அதற்கெனப் பயன்படுத்தப்படாது செயலாளரையும் தலைவரையும் உள்ளடக்கிய 18 பேர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

**3.3 பயன்படுத்தப்படாத/குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பழுதுபார்த்தலின்றி ரூபா 9,737,730 கூட்டுத் தொகையுடைய 03 வாகனங்கள் சபை வளாகத்தில் பயனற்றிருந்தன.

**3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடத்தில் அமைந்துள்ள 23 பொது நீர்க் குழாய்கள் மற்றும் 12 பொது குளியல் இடங்களில் 2002 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து மீளாய்வாண்டு வரை தொடர்ந்து வரும் நீர்க் கட்டண நிலுவை சம்பந்தமாக 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய மொத்தத் தொகை 48,902,698 ஆகும். எனினும், சபை சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களில் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை வெளிப்படுத்தப்படவில்லை.

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

(அ) 2016 ஆம் ஆண்டின்போது 75 வேலைகள் கைவிடப்பட்டிருந்தன. அவற்றின் மதிப்பீட்டுக் கிரயம் ருபா 33,060,891 ஆகும்.

(ஆ) 2016 ஆம் ஆண்டின்போது சபையின் நிதியத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றப்படவிருந்த வேலைகளது மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 43,106,690 ஆகும். எனினும், மதிப்பீட்டின் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்ட தொகை ரூபா 29,100,000 ஆகும்.

**3.6 தின்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் (மே.மா) 2016 டிசெம்பர் 04 ஆம் திகதிய LGD/03/01/13 இலக்கக் கடிதத்தின் மூலம் 2016 நவம்பர் 01 ஆந் திகதி முதல் அரச நிறுவனங்கள், பாடசாலைகள், ஏனைய நிறுவனங்கள் என்பவற்றினது கழிவுப் பொருட்கள் உருவாகும் இடத்திலேயே அவற்றை வெவ்வேறாக்கிச் சேகரிப்பது கட்டாயமாக்கப்பட்டு அது தொடர்பாக நிறுவனத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தபோதும், 2017 யூன் 12 ஆந் திகதியிலும் அதற்கான நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளவில்லை.

(ஆ) 2008 யூலை 30 ஆந் திகதிய 1560/6 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்ட மேல் மாகாண 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கழிவுப் பொருள் முகாமைத்துவ விதியின் 02 ஆம் அத்தியாயத்தினது 18(1)க்கமைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும் குத்தகைக்கு புறம்பாக வீட்டுக்கு வீடு கழிவுகளைச் சேர்க்கும் செலவை ஈடுசெய்வதற்கு மாதாந்தம் கழிவுப் பொருள் கட்டணம் அறவிடப்பட வேண்டுமாயினும், முகாமைத்துவம் அதற்கான நடவடிக்கைகளை எடுக்காமையால் மீளாய்வாண்டில் ஏற்பட்ட இழப்பு ரூபா 10,448,400 ஆகும்

(இ) 2016 ஆம் ஆண்டின் பொருட்டு நாளாந்தம் அல்லது மாதாந்தம் கழிவுப் பொருள் முகாமைத்துவத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 சுற்றாடல் பிரச்சினைகள்**

கொலன்னாவை நகர வரம்பிற்குள் உள்ள மீதோட்டமுல்ல கழிவுத் தொகுதிக்கு கொழும்பு மாநகரசபையும் கொலன்னாவை நகரசபையும் கழிவுப் பொருட்களைக் கொண்டு செல்வதன் காரணமாக தீவிர சுற்றாடல் பிரச்சினைகளைப் போன்றே சுகாதாரப் பிரச்சினைகளும் உருவாகியிருந்தன. சுற்றாடலில் துர்நாற்றம் மற்றும் பிரதேசத்தில் உள்ள கிணற்று நீர் அசுத்தமடைதல் போன்றன ஏற்பட்டிருந்ததுடன், சூழவுள்ள மனைகளில் வசிப்போர் சுவாச நோய், சரும நோய்கள், நீர் மாசடைதல், உதரவிதான நோய்கள் என்பவற்றிற்கு ஆளாகி

நோயாளியாக உள்ளதாக பிரதேச சுகாதார மருத்துவ உத்தியோகத்தரின் அறிக்கைகள் மூலம் அவதானிக்கப்பட்டது. இதற்கமைய, நாளாந்தம் பெருகிச் செல்லும் கழிவுப் பொருட்கள் காரணமாக சுற்றாடலில் வசிப்போர் மன ரீதியாகவும், சுற்றாடல் மற்றும் சமுதாய, பொருளாதார ரீதியாகவும் தீவிர பிரச்சினைகளுக்கு ஆளாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2017 ஏப்ரல் 14 ஆந் திகதி மீதோட்டமுல்ல கழிவுப் பொருள் தொகுதி உடைந்து வீழ்ந்ததன் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்பு, தனியார், அரசதுறைச் சொத்துக்கள் சம்பந்தமான தகவல்களைச் சபை சமர்ப்பிக்காமையால் போதியளவு கணக்காய்வை மேற்கொள்ள முடியாதிருந்தது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய், செலவினம் என்பவற்றுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிலவியதன் மூலம் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 வருடாந்தப் பொருட் கொள்வனவுத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நகரசபை பொருட் கொள்வனவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதும், 2016 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களது அமுலாக்கம்

2003 யூன் 03 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்கச் சுற்றறிக்கைப் பிரகாரம் நிதியாண்டின்போது நடாத்தப்பட வேண்டிய குறைந்த பட்ச கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) கையிருப்புக் கட்டுப்பாடு
(ஈ) வருவாய் நிர்வாகம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) உள்ளகக் கணக்காய்வு